1992 செப்டம்பர் 25]

திரு. சிங்கை கோவிந்தராசு : இந்த அண்டு போனஸ் பிரச்சினையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாக எடுத்து வைத்ததின் பேரிலே போனஸ் பிரச்சினையை —இன்னும் 25 நாட்கள் தான் இருக்கின்றன தீபாவளி வருவதற்கு. தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் அவர்கள் போராட்டத்திலே ஈடுபடத் தயாராக இல்லை என்று என்னிடத்திலே நானும் ஒரு தொழிலாளி என்ற அடிப்படையிலே சட்டமன்றத்திற்கு வருகிற நேரததிலே கூறியும் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படாத வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுத்து போனஸ் வழங்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புவதோடு மூடிய ஆலைத் தொழிலாளர்களுக்கு உதவ தமிழக முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடிய ஆலைகளைத் திறந்து வாடிய தொழிலாளர்களின் வாட்டம் போக்கிய தங்கத் தலைவியினுடைய பொற்கால ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக தொழிலாளர்களுடைய நலம் காக்கப்படும். பாதுகாக்கப்படும். அவர்களுக்குரிய கோரிக்கைகளை சுமுகமாக இந்த ஆண்டு தீபாவளிக்கு முன்னதாகத் தீர்த்து வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) லால்குடி வட்டம் குமுலூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி ஜெ. லோகாம்பாள், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திருமதி ரமணி நல்லதம்பி, திருமதி ஜீனத் ஷெர்புதீன், திருமதி இலதா பிரியகுமார் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திருமதி ஜெ. லோகாம்பாள்.

திருமதி ஜெ. லோகாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''லால்குடிவட்டம் குமுலூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றப் போவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப் பட்டிருக்கிறது.

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1992 செப்டம்பர் 25

அறிக்கை.

16–12–1991-ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண்மைப் பொறியியல் மற்றும் விவசாயப் பட்டப் படிப்பு படித்து வரும் மாணவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதால், கோயம்புத்தூரில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு ஏற்படுகிறது என்றும், அதனால் வேளாண் பொறியியல் பட்டம் படிக்கும் மாணவர்களை வேறிடத்திற்கு மாற்ற வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவினைத் தொடர்ந்து அரசு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திடம் கலந்தாலோசித்தது. பல்கலைக் கழக வளாகத்தில் அமைதியை நிலை நாட்டவும், கோயம்புத்தூரில் சட்டம் ஒழுங்கை ஏற்படுத்தவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மைப் பொறியியல் படிக்கும் மாணவர்களை தற்பொழுது லால்குடி குமலூரில் இயங்கி வரும் வேளாண்மைக் கல்லூரிக்கு மாற்ற வேளாண்மை பல்கலைக் கழகம் இசைவு தெரிவித்ததின் பேரில், அரசு வேளாண்மைப் பொறியியல் பட்டப் படிப்பினை 1992–93 கல்வியாண்டிலிருந்து லால்குடியில் உள்ள வேளாண்மைக் கல்லூரியில் துவங்க முடிவு எடுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. லால்குடியில் உள்ள வேளாண்மைக் கல்லூரியில் வேளாண்மைப் பட்டப் படிப்பு முதலாண்டு மாணவர்களை (1992–93) திருச்சியிலுள்ள நாவலூர் குட்டப்பட்டு என்ற இடத்தில் இயங்கி வரும் குமரப் பெருமாள் பண்ணை விஞ்ஞான நிலையத்திற்கு மாற்றுவதற்கும், மற்றும் 2-வது 3-வது ஆண்டு மாணவர்களை மதுரை, கிள்ளிகுளம் போன்ற இடங்களில் நடந்து வரும் வேளாண்மைக் கல்லூரிகளில் மாற்றவும் அரசு முடிவு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. லால்குடியில் இயங்கி வரும் வேளாண்மைக் கல்லூரிக்கு கோயம்புத்தூரில் பயின்று வரும் வேளாண்மைப் பொறியியல் பட்டப் படிப்பு மாணவர்களை மாற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டு அதற்காக செலவுத் தொகையும் ஒதுககப்பட்டுள்ளது.

லால்குடி குமுலூரில் தற்பொழுது நடந்து வரும் வேளாண்மைக் கல்லூரியில், வேளாண்மைப் பொறியியல் பட்டப் படிப்பினை, தொடர்ந்து நடத்த முடிவு செய்து ஆணை பிறப்பித்துள்ளதால், அங்கு தொடர்ந்து இயங்கி வரும் வேளாண்மைக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள லால்குடியில் உள்ள குமுலூரில் எனது சொந்த கிராமத்தில் இருந்த வேளாண்மை பட்டப் படிப்புக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றுவதாக இந்தக் குறிப்பில் உள்ளது. அப்படி மாற்றாமல் அதுவும் தன்னுடைய தொகுதியிலேயே இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1992 செப்டம்பர் 25]

* மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வேளாண்மைப் பல் கலைக் கழகத்திலே பொறியியல் பட்டப் படிப்பு படிப்பவர் களுக்கும், வேளாண் பட்டப் படிப்பு படிப்பவர்களுக்கும் இடை யிலே கடந்த பல ஆண்டுகளாக தகராறுகள் நடந்து வரு கின்றன. அதனால் அந்தந்தப் பகுதியில் சட்டம் ஒழுங்கு சீர் குலையக் கூடிய நிலை ஏற்பட்டது. எனவேதான் கடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திலே வேளாண் பல்கலைக் கழகத்திலே பட்டப்படிப்பு படிக்கக்கூடிய மாணவர் களுக்கு தனிக் கல்லூரியும், பொறியியல் படிக்கக் கூடிய மாணவர் களுக்கு தனிக் கல்லூரியும் வைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டு லால்குடி குமுலூரிலே வேளாண்மைக் கல்லூரியில் பொறியியல் பட்டப் படிப்பும், இதர கல்லூரிகளிலே வேளாண் பட்டப் படிப்பும், கோவையிலே உள்ள பல்கலைக் கழகத்திலே முனைவர் பட்டப் படிப்பும் படிக்க பாடத் திட்டம் வகுப்பது என முடிவு செய்து அதன்படி அரசு முடிவு எடுத்து இருக்கிறது. எனவே கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றுகின்ற முடிவு ஏதும் அரசிடம் இல்லை.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன் னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வேளாண்மை பட்டப் படிப்பும், வேளாண்மைப் பொறியியல் பட்டப் படிப்பும் ஒரே இடத்தில் இருந்ததை நாம் அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவோமேயானால் அதனால் பிரச்சினைகள் ஏற்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறியவில்லையா? அப்படி என்றால் அங்கே ஏதாவது குழப்பம் ஏற்படும்போது, மீண்டும் அதே இடத்தில் வைக்க வேண்டும் என்று அந்த மக்களும் மாணவர்களும் விரும்பினால் அந்த அளவிற்கு, அதே இடத்திலே லால்குடியிலே வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த முடிவு எடுப்பதற்கு முன்னாலே அரசு தீவிர பரிசீலனை செய்து தான் முடிவு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தொட்டால் தீட்டு நிழல் பட்டால் தோஷம் என்று இந்த அரசு எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் அத்தனையையுமே எதிர்த்துக் கொண்டிருப்பவர் கள் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் அந்த குமுலூரில் உள்ள கல்லூரிக்கு அதனுடைய வளர்ச்சிக்கு அங்கே உள்ள மாணவர்கள் வல்லுநர் விதைக் கடலையை உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய

முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 2 கோடி ரூபாயை தேசிய பால் பெருக்குத் திட்டத்தின் வாயிலாக பெற்றுத் தந்திருக்கின்றார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 12 ஆவது அறிக்கையினைப் பேரவைக்கு அளிக்கின்றேன். போதிய அவகாசம் இல்லாத காரணத்தால் அறிக்கையின் அச்சிட்ட பிரதிக்குப் பதிலாக படி எடுத்த பிரதி டம்மி ரிப்போர்ட் அளிக்கப்படுகிறது. இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கை அச்சிடப்பட்டு கிடைக்கப்பெற்றவுடன் அவைகள் உறுப்பினர்களுக்குத் தனித் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1992). மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் தமது திருத்தத்தை மொழியலாம்.

(†) 21–9–1992, ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.